**கண்டி மாநகர சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 12 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் நகரபிதாவிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கண்டி மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,936,596 ஆன நிலையான வைப்பு வட்டி, வருமானமாக இனங்காணப்படவில்லை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ஆ) | வீதவரி வருமானம் ரூபா 452,984 தொகை கூடுதலாக இனங்காணப்பட்டிருந்தது | வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். | பரிசீலித்து எதிர்காலத்தில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கிறேன் |
| (இ) | வீதி குத்தகை வருமானம் ரூபா 400,000 தொகை கூடுதலாக இனங்காணப்பட்டிருந்தது | வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ஈ) | நீர் வருமானம் ரூபா 8,362,283 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |
| (உ) | வருமான விடயம் 50322(iii) தொடர்பாக பெற வேண்டிய ரூபா 8,613,070 தொகை நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்படவில்லை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ஊ) | மோடார் வாகனம் மற்றும் மாட்டு வண்டிகளின் பெறுமதி ரூபா 77,329,450 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கூட்டுத் தொகை ரூபா 5,098,811 ஆன செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி பெறுமதி கணக்கீடு செய்யப்படவில்லை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 06 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளிற்கு இடையில் ரூபா 80,961,300 ஆன இணங்காமை நிலவியது. | வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். | பரீட்சித்து துரிதமாக பதில் வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்றை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 40,643,751 ஆனது. | பெற வேண்டிய தொகையை அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை அறவிட மற்றும் ஏனைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்றை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 38,328,935 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் கொடுப்பனவுகளை தீர்த்து கணக்காய்விற்கு அறிக்கையிடுகிறேன். |

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

தகவல்கள் சமர்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்களை சமர்பிக்காததால், கூட்டுத் தொகை ரூபா 26,134,498 ஆன பண்டக கடன் கொடுத்தோர் மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | குறித்த தகவல்களை பரீட்சித்து எதிர்காலத்தில் செயற்பாடுகளை மேற்கொள்கிறேன். |

**1.3.5 இணங்காமை**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நி.பி. 1646 | 135 வாகனங்கள் தொடர்பாக லொக் குறிப்பு புத்தகங்கள் பேணப்படாததுடன், வானங்களிற்கு பயன்கடுத்தப்பட்ட டயர் சில்லுகள் தொடர்பான தகவல்கள் லொக் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளணி குறைபாடு காரணமாக, இச் செயற்பாடு தாமதித்துள்ளதுடன், எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ஆ) ஏனைய சுற்றறிக்கைகள் | | | |
| (i) உள்ளுராட்சி ஆணையாளரின் (மத்திய மாகாண) சுற்றறிக்கை இலக்கம் 2016/03 இல் | | | |
| • 05 பந்தி | மாநகர சபைக்கு சொந்தமான டொரின்டன் மற்றும் கெப்பட்டிபொல வியாபார கட்டிடத் தொகுதியில் கடையறை வாடகை 05 வருடங்களிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்துள்ள போதும், இது வரை பதில் கிடைக்கவில்லை. |
| • 05 (ii) பந்தி | மத்திய வியாபார சந்தையின் கடையறைகளிற்கு 2016 ஆண்டு முதல் புதிய மதிப்பீடுட்டு வாடகையை வருடாந்தம் 25 சதவீதப் படி அதிகரிக்க சபை தீர்மானம் நிறைவேற்றியிருந்த போதும், அதற்கான நிபந்தனைகளை உடன்படிக்கையிற்கு உட்படுத்தி புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |
| • 06 பிரிவு | கெப்பட்டிபொல மற்றும் மெனிக்கும்புர வியாபார கட்டிடத் தொகுதியில் 107 கடையறைகளில் இருந்து புதிய மதிப்பீட்டின் மீது | சுற்றறிக்கை பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வியாபார கட்டிடத் தொகுதிக்காக புதிய மதிப்பீட்டு தொகையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன், ஜோஜ் ஈ. த சில்வா வியாபார கட்டிடத் தொகுதியில் புதிய மதிப்பீட்டின் மீது குத்தகைகாரர்களுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்தடப்பட்டு இருக்கவில்லை. | | செலுத்துமாறு அறிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் தொடர்புடைய செயற்பாடுகளை எடுக்கிறேன். |
| (ii) | 2011 ஜுன் 13 திகதிய பீஎல்/10சீ/01/11 இலக்க உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் மாநகர சவை அதிகார சட்டத்தின் 272 பிரிவு. | நெடுஞ்சாலையுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல் பலகைகளுக்காக துணைச் சட்டம் விதித்து வருமானம் அறவிடாது, சபை தீர்மானமொன்றின் மீது கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை உபதேசங்கள் பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். | பலகையின் அளவின் மீது அறிவிட வேண்டிய தொகையை மாத்திரம் சபைக்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதாக அறிவிக்கிறேன். |
| (iii) | விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய விதிக் கோவையின் 39/40 பிரிவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மற்றும் ஓய்வூதிய பணிப்பாளரின் 1/99, 1/2002 மற்றும் 13/2006 சுற்றறிக்கை | உள்ளூராட்சி சேவையில் கடமை புரிகையில் மரணித்தவர்களின் பிள்ளைகளிற்காக திறக்கப்பட்டு, மாநகர சபையின் பொறுப்பிள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 நபர்களின் கணக்கு புத்தகங்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தகவல்கள் அல்லது முகவரிகளை கடிதக் கோவைகளிலிருந்து தேடிக் கொள்ள முடியாததுடன், எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.6 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பூங்கா பிரிவிற்காக புற்பாளம் கொள்வனவு செய்வது தொடர்பான விலை மணு கோரல் அறிவித்தலின் படி, வழங்குனர் புற்பாளங்களை போக்குவரத்து செய்ய வேண்டிய போதும், சபையினால் புற்பாளங்களை போக்குவரத்து செய்யது 1,418.5 லீட்டர் எரிபொருளிற்காக ரூபா 147,524 செலவிடப்பட்டிருந்தது. | டென்டர் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புற்பாள போக்குவரத்திற்காக அங்கீகாரம் பெறப்பட்டதுடன், சபைக்கு சாதகமான விதத்தில் போக்குவர்த்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 609,888,349 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 586,748,840 ஆனது.

**2.2 நிதி கட்டுப்பாடு**

02 வங்கி கணக்குகள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 திகதி தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றை பரீட்சிக்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | விநியோகிக்கப்பட்ட போதும், கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்படாத ரூபா 1,013,488 பெறுமதியான காசோலை தொடர்பாக நிதிப் பிரமானம் 396 பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கடந்த 06 ஆண்டுகளினுள் வைப்பு செய்யப்பட்ட போதும், மாற்றப்படாத ரூபா 1,903,095 பெறுமதியான காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | துரிதமாக பரிசீலித்து கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். |
| (இ) | நேரடி செலவு வங்கி வைப்பு ரூபா 1,600,453 தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடயங்களை கண்டறிந்து கணக்காய்விற்கு அறிக்கையிடுகிறேன். |
| (ஈ) | நேரடி வரவு ரூபா 152,488 இனை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | வங்கியிடம் விசாரித்து குறித்த தகவல்களை கணக்காய்விற்கு அறிக்கையிடுகிறேன். |

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | சிட்டையிடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீத வரி மற்றும் குத்தகை | 933,118,000 | 753,074,508 | 879,044,931 | 277,247,237 | 878,245,000 | 731,472,381 | 634,109,151 | 252,948,621 |
| (ii) வாடகை | 626,128,000 | 132,727,171 | 119,186,633 | 112,966,348 | 123,276,000 | 119,538,223 | 112,010,789 | 74,296,012 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணம் | 51,422,000 | 47,114,983 | 47,114,983 | ---- | 51,854,100 | 46,569,841 | 46,568,941 | - |
| (iv) ஏனைய வருமானம | 689,704,000 | 620,876,524 | 620,876,524 | ----- | 615,797,000 | 607,869,074 | 484,052,597 | 806,186,283 |
| கூட்டுத் தொகை | 2,300,372,000 | 1,553,793,186 | 1,666,223,071 | 390,213,585 | 1,669,172,100 | 1,505,449,519 | 1,276,741,478 | 1,133,430,916 |

### 2.3.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீதவரி | | |
| 2019 திசெம்பர் 31 திகதியன்று அறவிடப்பட வேண்டிய ரூபா 179,335,183 ஆன வீதவரி அறவிடப்படவில்லை. | வீதவரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) காணி வரி | | |
| 2019 திசெம்பர் 31 திகதியன்று அறவிடப்பட வேண்டிய ரூபா 18,810,429 ஆன காணி வரி அறவிடப்படவில்லை. | நிலுவை காணி வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) நீர் வரி | | |
| மெனிக்கும்புர வியாபார கட்டிடத் தொகுதியின் மலசலகூட தொகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 630,363 ஆன நீர் கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை நீர் வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுற்றுலா தகவல் மத்திய நிலையத்திற்காக சிட்டையிடப்பட்ட ரூபா 600,000 வருமானம் சேர்க்கப்படவில்லை. | வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய தொகையை அறவிடுகிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மத்திய வியாபார சந்தை மற்றும் ஏனைய நகர சந்தைகளின் கடையறை வாடகை மற்றும் டென்டர் கட்டணமாக பெற வேண்டிய ரூபா 41,250,668 தொகை அறவிடப்படவில்லை. | வருமானம் அறவிடப்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டின் படி சிட்டையிடப்பட்டதால், நிலுவை வளர்ந்துள்ளது. |
| (இ) | மெனிக்கும்புர வியாபார சந்தையிலிருந்து பெற வேண்டிய ரூபா 12,939,958 ஆன வாடகை தொகை அறவிடப்படவில்லை. | வாடகை தொகை அறவிடப்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் சிட்டையிடப்பட்ட போதும், பழைய வாடகையே செலுத்தப்படுவதால், நிலுவை தொகை வளர்ந்துள்ளது. |
| (ஈ) | 2011 ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 20,917,165 பெறுமதியான புகையிரத பாதை வியாபார கட்டிடத் தொகுதியிலிருந்து ஒரே தடவையில் சேர்க்கும் பணம் அறவிடப்படவில்லை. | ஒரே தடவையில் சேர்க்கும் பணம் அறவிடப்பட வேண்டும். | 2020 ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.3.4 ஏனைய வருமானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆண்டு முதல் நிலவி வரும் வாகன தரிப்பிடத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 200,567,833 ஆன வருமானத்தை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | அறவிட வேண்டிய தொகையை அறவிட வேண்டும். | வழக்கொன்று காணப்படுவதுடன், எதிர்காலத்தில் தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | வீதி குத்தகைக்கு வழங்கல் அல்லது, வாகன தரிப்பிட கட்டணமாக அறவிட வேண்டிய ரூபா 9,131,623 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | குறித்த நிறுவனத்தினால் அவ்வப்போது நிலுவை தொகை செலுத்தப்படுகிறது. |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 23,329,769 ஆன விளம்பர பலகை கட்டண வருமானம் அறவிப்படவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | எதிரகாலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டியதாக இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,072,900 ஆகவிருந்தது. | கிடைக்க வேண்டிய தொகையை அறவிட வேண்டும். | எதிரகாலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 26,000,000 ஆன ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | குறித்த செயற்பாடுகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பேராதெணிய பாதையில் அமைந்துள்ள கட்டிடத்திற்காக வழங்கப்பட்ட நீர் விநியோகம் தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 194,963 ஆன நிலுவை தொகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை நடாத்திச் செல்ல பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 07 கட்டிடங்களிற்கான உடன்படிக்கை காலத்தை விஞ்சி 02 வருடங்கள் செல்லும் வரை புதிய உடன்படிக்கைகளிற்கு கைச்சாத்திட்டிருக்காததுடன், குத்தகை வழங்கப்பட்ட 05 கட்டிடங்களிற்கு மாநகர சபை பிரதேச செயலகத்துடன் ஏற்புடைய உடன்படிக்கைகளிற்கு கைச்சாத்திட்டிருக்கவில்லை. | ஏற்புடைய உடன்படிக்கைகளிற்கு கைச்சாத்திட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 275 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் 03 பதவி மிகையும் நிலவின. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| நகர சபையில் சேவையாற்றி மரணித்த, ஓய்வு பெற்ற மற்றும் விலகிச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,630,460 ஆன கடன் மீதியொன்று அறவிடப்படவில்லை. | கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது பிணையாலிகளிடமிருந்து அறவிடுகிறேன். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான குறைபாடுகள்** | | |
| (i) | கெப்பட்டிப்பொல வியாபார கட்டிடத் தொகுதி கீழ் மாடியின் கடையறைகள் நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளதுடன், 34 கடையறைகளிலிருந்து ரூபா 1,221,291 ஆன கடையறை வாடகை 02 வருடங்களிற்கு விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்பட்டது. | நிலுவையை அறவிட மற்றும் கடையறைகளை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வியாபார கட்டிடத் தொகுதியை பழுதுபார்த்து, குத்தகைகாரருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மெனிக்கும்புர சில்லரை வியாபார கட்டிடத் தொகுதியில் காணப்படும் 31 கடையறைகளிலிருந்து 02 வருடங்களை விஞ்சிய காலமாக 3,394,294 ஆன தொகை நிலுவையாக இருந்ததுடன், கடையறைகளின் உடமையை பெற்றுக் கொள்ள அல்லது வேறு வழிகளில் நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட வேண்டும். | 13 கடையறைகளின் உடமையை சுவீகரித்துள்ளதுடன், தற்போது பழுதுபார்த்தல் வேலைகள் நடைபெறுகின்றன. |
| (iii) | ஜோர்ஜ் ஈ த சில்வா வியாபார கட்டிடத் தொகுதியில் 11 கடையறைகளிலிருந்து ஒரு வருடத்திற்கும் அதிக காலத்தை விஞ்சிய நிலுவை கடையறை வாடகை மீதி ரூபா 1,618,875 | நிலுவை தொகையை அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் பணத்தை அறவிட மற்றும் சட்ட ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனதுடன், கடையறைகளின் உடமையை பெற்றுக் கொள்ள அல்லது வேறு வழிகளில் நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (iv) | தனியார் நிறுவனமொன்றிற்கு சொந்தமான இலத்திரனியல் விளம்பரப் பலகை தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 940,083 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவையை அறவிட அல்லது உடன்படிக்கை பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விளம்பரத்தை களற்றி அகற்றுமாறு கைத்தொழில் பிரிவிற்யிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | உள்ளுராட்சி ஆணையாளரின் இலக்கம் 2006/03 மமா/உ.ஆ.ஆ சுற்றறிக்கை பிரகாரம், போகம்பர வியாபார கட்டிட தொகுதி கடைகளை குத்தகைக்கு வழங்கையில், குத்தகைகாரர்களுடன் முறையான உடன்படிக்கைகளிற்கு கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பண்டக முற்பணம் மீது ரூபா 3,512,382 ஆன பெறுமானம் ஒன்று முற்செலுத்தலாக வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சேவையை பெற்றுக் கொண்ட பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டும். | ஒரு பகுதி தீர்க்கப்பட்டுள்ளதுடன், மீதியை எதிர்காலத்தில் தீர்க்கிறேன். |

**3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| போதியங்கன மாவத்தையில் தனிப்பட்ட உரிமையாளர் ஒருவரின் காணியினுள் நிர்மாணிப்பதற்கான இணக்கப்பாட்டை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளாது சபையினால், ரூபா 5,018,984 செலவில், காணியின் எல்லை வித்தியாசமாகும் வகையில் பாதுகாப்பு மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வித்தல் உடைந்து செல்கையில், எல்லையை கண்டறிய முடியாததால், இப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.6.1 சொத்தக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை வருமானம் இழக்கப்பட்டுள்ளமை | | |
| | சபையினால் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை நடாத்திச் செல்ல வழங்கப்பட்டிருந்த 14 கட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 129,000 ஆன வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | வாடகை தொகை சரியாக இனங்காணப்படாததுடன், எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | போகம்பர வியாபார கட்டிடத் தொகுதியில் 42 கடையறைகள் 15 வருடங்களிற்கு விஞ்சிய காலமாக மூடப்பட்டுள்ளதுடன், அறவிட வேண்டிய நிலுவை கடையறை வாடகை ரூபா 334,916 அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வாடகை அறவிட மற்றும் சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். | கடையறைகள் பழுதடைந்த நிலையிலுள்ளதால், சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. |
| (இ) | மூல உபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் குட்செட் வியாபார கட்டிடத் தொகுதியின் கடை உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குகையில், சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 4,235,468 ஆன வாடகையை அறவிடாது, இழப்பீடு வழங்கி முடிவுருத்தப்பட்டிருந்தது. | இழப்பீடு வழங்குதல் சரியான முறைமையின் பிரகாரம், மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆள் அடையாலத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதமையால், நிலுவை தொகை அறவிட முடியாதுள்ளது. |
| (ஈ) | ரஜவத்த புதிய வியாபார கட்டிடத் தொகுதியிலிருந்து எதிர்பார்த்த ரூபா 7,500,000 வருமானத்தை ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களிலிருந்து வருமானம் பெற்றுக் கொள்ள வேண்டும். | மதிப்பீடு பெற்றுக் கொள்ளல் மற்றும் டெண்டர் நடைமுறையிற்காக காலமொன்று செலவாகியுள்ளது. |

### 3.6.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி மற்றும் காலத்தை கண்டறிய முடியாத 15 வகை பண்டங்கள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | பண்டகக் கணிப்பீட்டு சபையின் பரிந்துரையிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.6.3 வாகன பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள், செலுத்தும் கி.மீ அளவிற்காக கொடுப்பனவு செய்யும் முறை தொடர்பான நிபந்தனைகள் ஒழுங்காக உடன்படிக்கையிற்கு உட்படுத்தாது, 13 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. | சரியான விதத்தில் உடன்படிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம், 60 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து வாகனங்களிற்கும் லொக் குறிப்பு புத்தகம் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 ஆண்டில் சொத்து உரிமையாளரிற்கு உடமை கிடைத்துள்ள பர்சஸ் 31.5 ஆன கடுகஸ்தொட்ட பாதை, இலக்கம் 81/1 கொண்ட சொத்து சபை வீதவரி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், உரிமையாளர் அறிவிக்கப்படாமல் 2017 ஆம் ஆண்டில், இவ்வாதனம் இரண்டு நபர்களுக்கு பர்சஸ் 21.5 மற்றும் பர்சஸ் 10 என உரிமையானது என்பதாக வீதவரி பதிவேட்டை திருத்தியதால், முன்னால் உரிமையாளரிற்கு ஏற்பட்ட அசாதாரண நிலையினை சீர்செய்ய சபை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி பதிவேட்டு திருத்தம் முறையாக செய்யப்பட வேண்டும் | வழக்கு தீரப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நீர் விநியோகித்திருந்த ஓர் நுகர்வாளர் 2015 ஆண்டில், நீர் மாணிக்கு ஏற்படுத்திய நட்ட இழப்பீட்டிற்காக மாணி நட்டமாக ரூபா | நட்டத்தை அறவிட வேண்டும். | நட்டத்தை கணிப்பிட்டு எதிர்காலத்தில் அறவிடுகிறேன். |

58,880 மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதும், மாணி பாதிப்பினால், குறைத்துக் காட்டப்பட்ட நீர் பாவனையிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,495,723 தொகை அறவிடப்படவில்லை.

### 3.9 பெறுகைகள்

#### 3.9.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அய்லப்பெரும் மைதான கால்வாய் தயாரித்தல் - ரூபா 4,065,545 | | |
| | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.3 பிரிவு பிரகாரம், இடமளிக்க முடியுமான எதிர்பாராத ஒதுக்கீட்டு எல்லையை மீறி ரூபா 1,409,469 செலவிடப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | திருத்தப்பட்ட மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 ஆண்டில், ''விஷேட கருத்திட்ட பிரிவு'' இனால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் | | |
| (i) | 15 கருத்திட்டங்களில் நிறைவேற்ற வேண்டுமென இனங்கண்ட ரூபா 22,939,730 ஆன மதிப்பீட்டு வேலைகளிற்கு இடையில் ரூபா 7,806,888 ஆன வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. | மதிப்பீடு பிரகாரம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான பதிலொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13 பிரிவிற்கு முரணாக 06 வேலைகளில் இடமளிக்கக் கூடிய முறனையும் மீறி அங்கீகாரமின்றி ரூபா 3,356,841 ஆன வேலைகள் 08 சதவீதம் முதல் 66 சதவீதமான வீச்சளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் சரியான பதிலொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.1 மற்றும் 8.13.2 பிரிவுகள் பிரகாரம், 02 வேலைகளின் மதிப்பீட்டிற்கு மாற்றமாக நிர்மாணிக்கப்பட்ட வேலைகளிற்காக ரூபா 1,460,037 பெறுமதியுடைய விலகல் கட்டளையொன்றை அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் சரியான பதிலொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 09 வேலைகளிற்காக களஞ்சியத்திலிருந்து பெற வேண்டிய பண்டங்களின் பெறுமதி ரூபா 24,052,674 ஆன போதும், அதற்கு மேலதிகமாக ரூபா 1,588,395 பெறுமதியான பண்டங்கள் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. | தேவையான பண்டக அளவுகளை மாத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், சரியான பண்டக கட்டுப்பாட்டு முறைமையொன்றை பேணிச் கொள்ள வேண்டும் | எதிர்காலத்தில் சரியான பதிலொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (v) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 பிரிவு பிரகாரம், மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 ஒக்டோபர் 14 திகதிய 2/2011 இலக்க சுற்றறிக்கை பிரகாரம் நேர் உழைப்பு முறையின் கீழ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 42,224,357 பெறுமதியான 32 வேலைகளிற்கான வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vi) | விஷேட கருத்திட்ட பிரிவின் முதன்மை நோக்கமான ‘‘வெளி ஒப்பந்தக்காரர்களிற்கு பாய்ச்சப்படும் இலாபத்தை சேமித்தல்’’ எனும் நோக்கம் நிறைவேறி உள்ளனவா என, 07 வேலைகளை பற்றி மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது 03 வேலைகள் 13 சதவீதம் முதல் 73 சதவீதம் வரை நட்டமடைந்திருந்தமையால், எதிர்பார்த்த நோக்கம் அடையப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | கருத்திட்ட நோக்கம் அடையப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vii) | விஷேட கருத்திட்ட அலகின் கொள்ளளவின் பிரகாரம், வருடாந்தம் மெற்கொள்ள முடியுமான வேலைகளை மாத்திரம் சரியாக இனங்கண்டிருக்காததுடன், 2018 ஆண்டினுள் செயற்படுத்த திட்டமிட்ட ரூபா 78,327,456 பெறுமதியான 90 வேலைகள் 2019 ஆண்டிற்கு நடைமுறை வேலைகளாக்கப்பட்டிருந்தன. | உரிய மேற்பார்வையின் கீழ் முக்கிய வேலைகள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | பாரிய அளவான வேலைகள் காணப்படுவதனால், எதிர்வரும் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும். |
| (இ) | 04 ஆம் வலய அலுவலகக் கட்டிடம் | | |
| (i) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.11 பிரிவு பிரகாரம், மனுதாரர் சாத்தியமற்ற குறைந்த வீதங்களை (rate) குறிப்பிட்டிருந்தால், அதற்காக விலைகள் பகுப்பாய்வொன்று மற்றும் கூடிய பெறுமதியிலான செயலாற்றுகை காப்பொன்றை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், அதற்கு மாற்றமாக பொறியியல் மதிப்பீட்டை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலதிக செயலாற்றுகை ஒன்றினை பெற்றுக் கொள்வது தொடர்பாக ஒப்பந்தக்காரர் அறிவூட்டப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| | விடவும் 30 சதவீதம் குறைத்து சமர்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரின் விலைமனு ஏற்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | ICTAD Publication No - SCA/05 அளவுத் திட்டத்தின் 1001.7 இலக்க பந்தி பிரகாரம், கொன்கிரீடிற்கு கொடுப்பனவு செய்ய முன்னர் பொழிப்பு பரிசோதனை அறிக்கை பெறப்பட வேண்டிய போதும், அவ்வறிக்கை இல்லாது முதலாவது உள்ளக பட்டியல் மூலம் கொன்கிரீட் 35.49 கன மீட்டர்களிற்காக ரூபா 687,015 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ICTAD வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தரப் பரிசோதனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | மேலதிக வேலைகளிற்காக விலகல் கட்டளையை அங்கீகரித்துக் கொள்ளாது ரூபா 108,920 தொகை முதலாம் உள்ளக பட்டியல் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | மேலதிக வேலைகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுமாறு ஒப்பந்தக்காரர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |

(ஈ) வெலிகந்த சனசமூக நிலையத்திற்கு செல்லும் பாதையில் மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் தடுப்புச் சுவர் நிர்மாணித்தல்.

---

| | | | |
|---|---|---|---|
| (i) | வேலைக்கான ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கையில், பலப்படுத்தல் கி.கி. 235.5 இற்காக முறையற்ற விதத்தில் ரூபா 73,555 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மேல் குறிப்பிட்ட வேலை தொடர்பான Distribution bar, Main bar, மற்றும் Lapping களிற்காக தேவையான அளவை விடவும் கம்பிகளிற்காக ரூபா 84,530 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | சரியாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | கூடுதலாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட்டுள்ளது. |
| (iii) | மதிப்பீடு பிரகாரம், பயன்படுத்த வேண்டிய கொன்கிரீடின் தகைமை பரிசோதனைகளிற்காக ரூபா 10,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும், தகைமை பரிசோதனையின்றி 28.20 கன மீட்டர் கொன்கிரீட்களிற்காக ரூபா 626,040 செலுத்தப்பட்டிருந்தது. | தகைமை பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | தொழிநுட்ப அறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

(உ) வலைய அலுவலகம் மேற்கொண்ட வேலைகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | 2019 ஆண்டினுள் சபையின் நேரடி ஊழியத்தின் கீழ் மேற்கொண்ட 13 வேலைகள் தொடர்பான வேலை பத்திரத்திற்காக மதிப்பீடு பிரகாரம் தேவையான மூலப்பொருட்களின் அளவை விடவும் ரூபா 1,155,079 ஆன பண்டங்கள் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டிருந்தன. | தேவைான அளவு மூலப் பொருட்களை மாத்திரம் விநியோகிக்க வேண்டும். | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | வேலைப் பிரிவின் மூலம் வலயம் 01, 02, 03, 04 மற்றும் 05 இல் நடைமுறைப்படுத்திய பராமரிப்பு வேலைத் திட்டங்களிற்காக ரூபா 44,744,293 செலவிடப்பட்டுள்ள போதும், மேற்கொண்ட வேலைகளிற்காக வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | 2019 ஜனவரி 25 திகதிய நகர பொறியியலாளரின் கடிதம் பிரகாரம் ready mix concrete அளவுத்திட்டம் slum test 125 ± 25 mm ஆகுமென மற்றும் ஒவ்வொறு 15 ($m^3$) கன மீட்டர்களிற்கும் concerete strength இனை 28 தினங்களினுள் பரீட்சித்து 20 N காணப்படுவது தொடர்பாக வழங்குனரால் வேலைத்தள பரிசோதனை தொடர்பான அறிக்கை வழங்க வேண்டிய போதும், அவ்வாறு பரிசோதிக்காது வலயத்தினுள் ரூபா 2,274,000 பெறுமதியான 167.25 ($m^3$) கன மீட்டர் ready mix concrete பயன்படுத்தப்பட்டிருந்தமையால், குறித்த நிர்மாணங்களின் தரம் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்பட்டது. | தகைமை பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | பொறியியல் சேவை திணைக்களத்தினால் பரீட்சித்து சான்றிதழ் வழங்கப்படும். |

4. கணக்கீடு மற்றும் நள்ளாழுகை

4.1 தீர்க்கப்படாத அவதானிப்புகள் மற்றும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 – 3.2(ஆ) – தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றிற்கு வழங்கப்பட்டுள்ள நீர் விநியோகத்தின் மூலம் மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 399,530 ஆன நிலுவை நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், நீர் விநியோகத் துண்டிப்பு அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | பகுதி பகுதியாக அறவிடப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 – 3.2(ஈ) – நிர்மாண அங்கீகாரம் கிடைக்காத கட்டிடமொன்றிற்கு போலியாக சமர்பிக்கப்பட்ட திட்டத்திற்கு மாநகர சபை அபிவிருத்தி அனுமதிப் பத்திரமொன்றை விநியோகித்திருந்ததுடன், கட்டிடத் திட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரமும் இல்லாது இருந்ததால், நிர்மாண பணிகளை இடைநிறுத்த அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் பிரகாரம் நிர்மாண மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். | வழக்கு விசாரிக்கப்படுகிறது. |
| (இ) | 2018 – 3.8(அ) – குடும்ப சுகாதார பெண் அலுவலர் ஒருவர் கல்வித் தகைமை சான்றிதழை மோசடியாக மாற்றம் செய்து சமர்பித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதும், அதற்காக சரியான ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காது, குறித்த உத்தியோகத்தரை குடும்ப சுகாதார சேவை தரம் 11 இற்கு தரமுயர்த்தி, 2008 ஜனவரி 01 முதல் 2017 ஜுலை 31 வரை ரூபா 3,130,652 சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் ஆரம்ப புலனாய்வு ஒன்றை மேற்கொள்ள நகர சபை ஆணையாளரிற்கு அனுப்பியுள்ள போதும், 2018 ஒக்டோபர் 31 திகதி அன்றும் அதன் ஆரம்ப புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | ஆரம்ப புலன்விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆரம்ப புலன்விசாரணை அறிக்கையை சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | 2018 – 3.8(இ) – கடுகஸ்தொட்ட நீர் குழாய் புதைக்கும் கருத்திட்டத்திற்காக குறித்த பொருட்களை பரிசோதிக்க இலங்கையிற்கு வெளியில் செலவிடுவதற்காக விடுமுறை கோருகையில் வெளிநாட்டில் தனது பராமரிப்பு செலவுகளை ஒப்பந்தக்காரர் வழங்குவதாக விடயப் பொருப்பு அமைச்சரிற்கும் மற்றும் ஆளுனரிற்கும் போலியான தகவல்களை குறிப்பிட்டு வெளிநாட்டு பிரயாணத்தை அங்கீகரித்துக் கொண்டுள்ள போதும், வெளிநாட்டுப் பயணத்திற்கான அனைத்து செலவுகளிற்காகவும் பொறியியல் மதிப்பீட்டின் வகை இலக்கம் 1.3 இன் கீழ் ரூபா 1,500,000 தொகை உள்ளடக்கி 2018 ஏப்ரல் 04 திகதி ஒப்பந்த நிறுவனத்திற்கு மாநகர சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்ய முன்னர் சரியாக அனைத்து தகவல்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும். | தகைமை பரிசோதனை அறிக்கை வழங்குகையில் இப் பொருட் பரிசோரனை கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயலொன்று என அறிவிக்கிறேன். |